செ.வெ.எண்:186 நாள்: 18.03.2018

# திருநெல்வேலி மாவட்டம் அருள்மிகு நெல்லையப்பர் அருள்தரும் காந்திமதி அம்மன் திருக்கோவில் திருக்குடமுழுக்கு விழா 27.04.2018 அன்று சிறப்பாக நடைபெறவுள்ளது என மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் தெரிவித்தார்கள்.

---

திருநெல்வேலி மாவட்டம் திருநெல்வேலி நகர் அருள்மிகு நெல்லையப்பர் அருள்தரும் காந்திமதி அம்மன் திருக்கோவில் திருக்குடமுழுக்கு விழா நடைபெறவுள்ளதை முன்னிட்டு திருக்கோவிலில் நடைபெற்று வரும் சீரமைப்பு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி இ.ஆ.ப, அவர்கள் தலைமையில் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் ஆய்வு செய்தார்.

பின்னர் அவர் தெரிவித்தாவது:-

திருநெல்வேலி மாவட்டம் திருநெல்வேலி நகர் அருள்மிகு நெல்லையப்பர் அருள்தரும் காந்திமதி அம்மன் திருக்கோவில் 14.5 ஏக்கர் பரப்பளவில் சுவாமி மற்றும் அம்பாளுக்கு தனித்தனியே கோவில் அமையப்பெற்று சங்கிலி மண்டபத்தால் இணைக்கப்பட்டு திருநெல்வேலி நகரின் மையப்பகுதியில் அழகுபெற அமைந்துள்ள பழமையான புராதனமான திருக்கோவிலாகும். இத்திருக்கோவிலானது கி.பி.ஏழாம் நூற்றாண்டில் பாண்டிய மன்னரால் கட்டப்பட்டதாகும். இத்திருக்கோவிலுக்கு 5 கோபுரங்களுடன் இரட்டைக் கருவறைகள் (ஸ்ரீ வேணுவனநாதர் நெல்லை ஸ்ரீ கோவிந்தர்) உள்ளதும் மூலவரான ஸ்ரீ வேணுவனநாதர் சுயம்பு வடிவிலும் காட்சி தரும் இத்திருக்கோவிலானது சைவத்திருத்தலங்களில் மிக முக்கிய திருக்கோவிலாகும். இத்திருக்கோவிலில் சுவாமியாக ஸ்ரீ நெல்லையப்பரும் அம்பாளாக ஸ்ரீ காந்திமதி அம்மனும் பக்தர்களுக்கு காட்சி தந்து அருள்பாலித்து வருகின்றனர். இத்திருக்கோவில் திருஞான சம்பந்தரால் பாடல் பெற்றதும் சைவ ஆகமங்கள் 28-ல் காமிக ஆகம விதிப்படி மிக்க அழகுடைய திருக்கோவிலாகும்.

இத்திருக்கோவிலில் முன்பு 07.04.2004 அன்று திருக்குடமுழுக்கு சிறப்புடன் நடைபெற்றது. தற்பொழுது 12 ஆண்டுகள் நிறைவுற்ற நிலையில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உத்தரவின்படி, மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்களால் சட்டப்பேரவையில் 2017-2018ம் ஆண்டு மானியக்கோரிக்கை அறிவித்தன்படி திருப்பணிகள் செய்து திருக்குடமுழுக்கு நடைபெறவுள்ளது.

திருப்பணி வேலைகள் தொடர்பாக தொல்லியல் துறையினர் ஐ.ஐ.டி. பேராசிரியர்கள் குழு, யுனெஸ்கோ நிறுவனத்தினர் மற்றும் இந்துசமய அறநிலையத்துறை ஸ்தபதிகள் ஆகிய வல்லுநர்கள் இத்திருக்கோவிலை ஆய்வு செய்து அறிக்கை வழங்கியதன் அடிப்படையில் 135 திருப்பணிகள் ரூ.4.92 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. மேலும் இக்கோவிலில் அம்மன் சன்னதி இரண்டாம் பிரகாரம் தென்மேற்கு திசையிலுள்ள கல்மண்டபம் ரூபாய் 71,00,000/- மதிப்பீட்டில் தற்பொழுது புனரமைப்பு பணிகளும் நடைபெற்று வருகிறது.

தற்போது கோபுரங்கள் விமானங்கள் சுதை வேலைகள் மரச்சிற்ப வேலைகள் கல்தூண்களை சுத்தம் செய்யும் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, எதிர்வரும் 27.04.2018 அன்று (சித்திரை மாதம் 14ம் தேதி) வெள்ளிக்கிழமை அதிகாலை 4.40 மணி முதல் 5.10 மணிக்குள் உத்திர நட்சத்திரம் மீன லக்னத்தில் அருள்மிகு நெல்லையப்பர் அருள்தரும் காந்திமதி அம்மன் திருக்கோவில் திருக்குடமுழுக்கு நடைபெறவுள்ளது.

இந்த திருக்குடமுழுக்கு விழாவில் அணைவரும் கலந்து கொண்டு எல்லாம் வல்ல அருள்மிகு நெல்லையப்பர் அருள்தரும் காந்திமதி அம்மன் திருவருளை பெற்றிட வேண்டும் என. மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி.விஜிலா சத்தியானந்த், அவர்கள் திருநெல்வேலி சட்டமன்ற உறுப்பினர் திரு.ஏ.எல்.எஸ்.லெட்சுமணன், இந்து சமய அறநிலைத்துறை இணை ஆணையர் திரு. பரஞ்ஜோதி, உதவி ஆணையர் திரு. சாத்தையா செயல்அலுவலர் திருமதி.ரோஷினி, வட்டாச்சியர் திரு.கணேசன்,முக்கியபிரமுகர்கள்திரு.சுதாபரமசிவன், திரு.பரணிசங்கரலிங்கம், ஆவின்திரு.ரமேஷ்,பல்லிகோட்டைதிரு.செல்லத்துரைதிரு.ஜெரால்டு,
திரு.ஆறுமுகம் மற்றும் அலுவலர்கள் , முக்கிய பிரமுகர்கள்,பக்தர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு:செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,திருநெல்வேலி